<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 61 /2025</u>

LW: 6 PW : 5

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி பெறப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மலர்விழி | க / பெ. | திரு. சண்முகம் |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் | வயது | 66 |

LW : 6 PW: 5

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**17.09.2025.**

நான் மன்னார்குடி மன்னை நகரில் வசித்து வருகிறேன். பாமினி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். நான் 2013 ஆம் வருடம் மேற்படி சங்கத்தில் இயக்குநராக பொறுப்பிலிருந்தேன். என்னிடம் காட்டப்படும் வரிசை எண் 6 தீர்மான புத்தகம் பக்கம் எண் 46 ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையெழுத்து மட்டும் அதசாஆ 19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) மேற்படி சங்கத்தின் பொறுப்பாளர்களாக குமார், சுரேஷ், தினகரன் ஆகியோர் இருந்தார்கள். 2013 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை அன்று நடந்த கூட்டத்தில் சத்தியமூர்த்தி என்பவர் கலந்துகொள்ளவில்லை. அதனால் அவரிடம் கேட்கப்படவேண்டிய விவரங்களை கேட்கமுடியவில்லை. என்னை பிரிவு 81 விசாரணை அதிகாரி விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் வரிசை எண் 48 ல் நான்கு பக்கங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிரிவு 81 விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்த

C.C. No. 61 /2025

வாக்குமூலம் என்னுடையதுதான் அந்த **வாக்குமூலம் அதசாஆ** **20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3) அதசாஆ 20 வாக்குமூலம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் இருந்தன அதில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.17 01:25:45 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.